தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. பொற்கொல்லர் பொன்னை "பறி" என்ற பெயரால் அழைப்பது
   - i. மரூஉ     iii குழூஉக்குறி
   - ii. இடக்கரடக்கல்     iv மங்கலம்
2. வேடர் "கள்" என்ற மதுவகையை சொல்விளம்பி என்று கூறுவது
   - i. குழூஉக்குறி     iii மரூஉ
   - ii. மங்கலம்     iv இடக்கரடக்கல்
3. அந்தணர்கள் தோசையை சக்கரத்தாழ்வான் என குறிப்பிடுவர். அவ்வாறு அழைப்பது
   - i. குழூஉக்குறி     iii மரூஉ
   - ii. மங்கலம்     iv இடக்கரடக்கல்
4. நான் நல்லை நகருக்கு வந்தேன். என்பதில் நல்லை என்பது
   - i. குழூஉக்குறி     iii மரூஉ
   - ii. மங்கலம்     iv இடக்கரடக்கல்
5. நான் கோவிலுக்குச் சென்றேன். என்பதில் கோவில் என்பது
   - i. இடைப்போலி     iii மரூஉ
   - ii. மங்கலம்     iv இடக்கரடக்கல்

பகுதி 2

1) "போரில் இருநிலத்தை ஆள இனித்துணிவதே கடன் என்றான் எம்பிரானே"
   1. இருநிலம் என்றால் என்ன? அவ்வாறு அழைக்கப்படுவது யாது?
   2. எம்பிரான் என குறிப்பிடப்படுபவன் யார்?
2) "கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த மொழிப்படியே கானம் தோறும் இரவு பகல் பல மூல சாகம் நுகர்ந்து உயிர்வாழ்தல் இனிது நன்றே"
   1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   2. கரவு, கானம், பல மூல சாகம் என்பதன் பொருள் யாது?
   3. தாதை என குறிப்பிடப்படுபவர் யார்?
   4. முனி என குறிக்கப்படுபவர் யார்?
3) "கோது இலான் இம்மொழி கூறலும் மாமாயன் கூறலுற்றான்"
   1. கோது இலான் என குறிக்கப்படுபவன் யார்?
   2. மாமாயன் எனப்படுபவர் யார்?
4) "கானகத்தே முடுகிச்சென்றால் பூதலத்தோர் ஏசாரோ, புகன்ற பெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ"
   1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   2. கானகம், பூதலத்தோர், வஞ்சினம், முடுகிச்செல்லல் என்பவற்றின் பொருளை எழுதுக.
5) "தாதூதி அளிமுரலும் தண்பதியும் தாயமும் தான் தரான் ஆகில்"
   1. குருநாட்டின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
6) "மீது ஊது வளைக்குலமும் வலம்புரியும் மிக முழங்க வெய்ய காலன் மாதூதர் மனம் களிக்கப் பொருது எனினும் பெறுவன் இது வசையும் அன்றே"
   1. போரின் உக்கிரம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
   2. எதனை வசையற்றது என்று தர்மன் கூறுகின்றான்?